## தமிழ் இணையக் கல்விக்கழகம்
## சென்னை – 600 025.

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**

**நான்காம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFF – LINE WRITTEN EXAMINATION)**

**சூன் – 2018**

**A041 இலக்கிய வரலாறு**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

### பிரிவு – 1

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. உலக முதல் மொழியாகப் பாராட்டப்படுவது எது?
2. வழக்கொழிந்த மொழிகளுள் ஒன்றினைக் குறிப்பிடுக.
3. தொல்காப்பியத்தின் ஆசிரியர் யார்?
4. பத்துப்பாட்டின் அடி எல்லை என்ன?
5. எட்டுத்தொகையில் அகப்புற நூல் எது?
6. திருமுருகாற்றுப் படையின் ஆசிரியர் யார்?
7. கடையெழு வள்ளல்கள் பற்றிக் குறிப்பிடும் பத்துப்பாட்டு நூல் எது?
8. இருண்ட காலத்தில் தமிழகத்தை ஆட்சி புரிந்தவர் யார்?
9. இளங்கோவடிகளின் சமயம் எது?
10. மணிமேகலையின் ஆசிரியர் யார்?
11. மணிமேகலையின் தோழி பெயர் யாது?
12. திருமந்திரம் எத்தனை தந்திரங்களைக் கொண்டது?
13. முதலாழ்வார் யாவர்?
14. முதலாழ்வார்கள் சந்தித்த இடம் எது?
15. பேயாழ்வார் அவதரித்த ஊர் எது?

## பிரிவு – 2

**எவையேனும் <u>ஐந்து</u> வினாக்களுக்கு <u>ஒரு பத்தி அளவில்</u> விடை தருக. (5x3=15)**

1. தமிழ்நாட்டில் விளையும் பொருட்கள் யாவை?
2. பாண்டிய நாட்டையே தமிழ்நாடு எனப் பாராட்டக் காரணம் என்ன?
3. தொல்காப்பியம் எத்தனை அதிகாரங்களையும் இயல்களையும் கொண்டுள்ளது?
4. கடைச்சங்கத்தின் காலம் எது? ஏன்?
5. பத்துப்பாட்டில் ஆற்றுப்படை நூல்கள் எத்தனை? அவை யாவை?
6. இரட்டைக் காப்பியங்கள் என அழைக்கப்படுவை எவை? ஏன்?
7. தனிச் செம்மொழிகள் எனப் பாராட்டப்படுவை எவை? ஏன்?
8. தமிழின் சொல் வளம் குறித்து அறிஞர் வின்சுலோவின் கருத்தை எழுதுக.

## பிரிவு – 3

**<u>மூன்று பக்கக் கட்டுரை வடிவில்</u> விடை தருக. (3x15=45)**

1. (அ) முச்சங்கம் குறித்த செய்திகளை அட்டவணைப்படுத்துக.

(அல்லது)

(ஆ) தொல்காப்பிய நூல் அமைப்பினை விவரிக்க.

2. (அ) பத்துப்பாட்டு நூல்கள் குறித்து விவரிக்க.

(அல்லது)

(ஆ) பதினெண் கீழ்க்கணக்கில் அக நூல்கள் குறித்துக் கட்டுரை வரைக.

3. (அ) சிலம்பின் சிறப்புகளை விவரிக்க.

(அல்லது)

(ஆ) திருமந்திரம் குறித்துக் கட்டுரை வரைக.

***